நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
மாற்றத்தின் ஆரம்பம்
www.dhinatamil.com
dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 05.03.2026 . மலர் 04 . இதழ் 63. வியாழக்கிழமை
dhinatamil
. NAGERCOIL EDITION . 05.03.2026 . VOL 04 . ISSUE 63. THURSDAY . 4 PAGES . Rs. 5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## இந்தி திணிப்பு - தமிழர்களின் சுயமரியாதையை சீண்டினால்...

# முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, மார்ச்.05-

புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு 'கர்தவ்ய த்வார்' என்று இந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பாஜக. 'மொழி ஒன்று - வரிவடிவம் மூன்று' எனும் வகையில் இந்திப் பெயரையே தமிழ், ஆங்கிலத்திலும் எழுதி வைக்கும் இழிவான இந்தி திணிப்பு செயலில் இறங்கியுள்ளது ஒன்றிய பாஜக அரசு. திருச்சி மண்டல ரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளனர்.

வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில் (EPF-O) ஏற்கெனவே 'பவிஷ்ய நிதி பவன்' என்ற பெயரைத் திணித்து விட்டனர்.

குற்றவியல் சட்டங்களுக்கும் சமஸ்கிருதப் பெயரைத்தான் ஆங்கில வரிவடிவத்தில் எழுதுகின்றனர்.

ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகத்தின் பெயர் 'ஜல் சக்தி' ஆகிவிட்டது.

மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டப் பெயர் மாற்றத்திலும் இதே வேலையைத்தான் காட்டினார்கள்.

கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது. தமிழர்களின் சுயமரியாதையைச் சீண்டிப் பார்க்கும் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும். இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பாஜக அரசு உணர வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 'இந்தி பெயரான 'கர்தவ்ய த்வார்' என்கிற வாசகத்தை இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய எழுத்துகளைக் கொண்டு புரிந்துகொள்ள முடியாத வகையில் எழுதியுள்ளதைக் கண்டித்து திருச்சியில் திமுகவினர் இன்று முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி ஜங்ஷன் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பு நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்தின்போது, நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு பெயின்ட் கொண்டு அழித்தனர். மத்திய அரசின் இந்தி திணிப்பு நடவடிக்கையைக் கண்டிப்பதாக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்திய கம்யூ. கண்டனம்:

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், "பாஜக ஒன்றிய அரசு இந்தித் திணிப்பு நடவடிக்கையில் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. இதன் தொடர்ச்சியாக திருச்சி ரயில்வே கோட்ட அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு, அதன் முகப்பு நுழைவாயிலில் தமிழ், இந்தி, ஆங்கிலம் என மூன்று மொழி எழுத்துகளிலும் 'கர்தவ்ய த்வார்' என்ற இந்தி வார்த்தை எழுதப்பட்டுள்ளது.

திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகத்தின் இந்த இந்தி மொழித் திணிப்பு நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் தமிழ், ஆங்கிலம், இந்தி என மூன்று மொழிகளில் அந்தந்த இரயில் நிலையங்கள், சந்திப்புகள் என எல்லா இடங்களிலும் எழுதியுள்ள நிலையில், திருச்சி ரயில்வே கோட்ட அலுவலகம் இந்தி வார்த்தையை தமிழ் மற்றும் ஆங்கில மொழி வடிவில் எழுதியிருப்பது அப்பட்டமான இந்தி மொழித் திணிப்பாகும்.

திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகம் உடனடியாக, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ள இந்தி வார்த்தை வடிவத்தை அகற்ற வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இதில் அலட்சியம் காட்டப்படுமானால் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, பொது மக்களை திரட்டி, நேரடிப் போராட்டத்தில் ஈடுபடும் என எச்சரிக்கிறது" என்று கூறியுள்ளார்.

## பணிந்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு!!



திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர்.

திருச்சி ரயில் நிலையத்தின் வரவேற்பு வளையத்தில், தமிழில் இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்து தற்போது இந்த எழுத்துக்கள் கழற்றி வீசப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிறுவனங்களில் இந்தி திணிப்பு என்பது சர்வ சாதாரணமான விஷயமாக மாறி வருகிறது. ரயில் நிலையங்களிலும் இந்தி திணிப்பு குறித்து விமர்சனங்கள் எழுந்தன.

குறிப்பாக, தமிழ்நாட்டின் சென்னை புறநகர் ரயில் நிலையம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் இந்தி எழுத்துக்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டின் மிக முக்கியமான ரயில் நிலையங்களில் ஒன்றான, திருச்சி ரயில் நிலையத்தின் நுழைவு வாயில் பகுதியில் உள்ள வளைவில், இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் எல்லோருக்கும் தமிழ் தெரியும். ஆனால், தமிழில் இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தால் எப்படி வாசிக்க முடியும். அப்படியான சம்பவம்தான் திருச்சியில் நடந்தது. 'கர்தவ்ய த்வார்' என்று தமிழிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருந்தது. இதை படித்து பார்த்த பயணிகள், அடேங்கப்பா.. இதென்ன திருச்சி ரயில் நிலையம் எழுந்து சென்று டெல்லிக்கு பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டதா என்ன? என்று சந்தேகம் எழுந்தது.

இதனையடுத்து விஷயம் அரசியல் தலைவர்களின் கவனத்திற்கு சென்றது. முதலமைச்சர் உட்பட, அனைத்து தரப்பினரும் கண்டனம் தெரிவிக்க, எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வித்தியாசமான பாணியில் அறிக்கை விட்டிருந்தார் இப்படியே போனால் சரிப்பட்டு வராது என்று உணர்ந்த திமுகவினர், உடனடியாக போராட்டக்களத்தில் இறங்கினர். விஷயத்தின் தீவிரத்தை உணர்ந்த ஒன்றிய பா.ஜ.க. அரசின் ரயில்வே நிர்வாகம், வழக்கம் போல பின்வாங்கிக்கொண்டது. தற்போது இந்த இந்தி வார்த்தைகள் கழற்றி தூக்கியெறியப்பட்டிருக்கின்றன.

# 17 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் வாலிபருக்கு 20 வருடம் சிறை தண்டனை

## நாகர்கோவில் போக்சோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!!

நாகர்கோவில், மார்ச். 5-

17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபருக்கு 20 வருடம் சிறை தண்டனை அளித்து நாகர்கோவில் போக்சோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது.

குமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஆற்றூர், புதுவீட்டுவிளை பகுதியை சேர்ந்த ரதீசன் என்ற ஸ்டான்லி (36) என்பவர் 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததற்காக மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போச்சோ பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, கோர்ட்டில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 20 வருடம் சிறை



தண்டனை மற்றும் 5000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்.

இந்த வழக்கில் நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வெகுவாக பாராட்டினார்.




மதுரை மேற்கு வட்டம் பெத்தானியாபுரம். குருதியேட்டர் எதிரில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான உழைப்பாளர் நலக்கூடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான உழைப்பாளர் நலக்கூடத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் குருதியேட்டர் எதிரில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான உழைப்பாளர் நலக்கூடத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் கட்டுமான தொழிலாளர்கள் பலர் உள்ளனர்.

# 28 சீட்!

## இறங்கி வந்த காங்கிரஸ்

## 1 ராஜ்யசபா சீட் - திமுக போனஸ்



சென்னை, மார்ச்.05-

திமுக கூட்டணியில் காங்கிரசுக்கு 28 சீட்டும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆட்சியில் பங்கு என்ற கோரிக்கையை ஓரங்கட்டிய காங்கிரஸ் தலைமை, 30 சட்டசபை தொகுதிகள், 2 ராஜ்யசபா சீட் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் ஆனால், 27 சட்டசபை தொகுதிகள், 1 ராஜ்யசபா இடங்கள் மட்டுமே தர முடியும் என்று திமுக தலைவர் ஸ்டாலின் உறுதியாக இருப்பதாகவும் தகவல் வெளியாகி வருகின்றன. இந்நிலையில் திமுகவுடன் காங்கிரஸ் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை இன்று மேற்கொள்கிறது என்று கூறப்பட்டது. ஆனால் காங்கிரஸ் கட்சியினர் இன்னும் அண்ணா அறிவாலயத்திற்கு செல்லவில்லை. பேச்சுவார்த்தை தாமதமாகிக் கொண்டிருக்கிறது.

திமுக - காங்கிரஸ் கூட்டணி ஒப்பந்தம் இன்று மாலை கையெழுத்தாகும் என தகவல் வெளியாகியிருந்த நிலையில், காங்கிரஸ் மேலிட பார்வையாளர் கிரிஷ் சோடங்கர் 3:50 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்துவிட்டார். அவரை வரவேற்கதான் செல்வப்பெருந்தகையும் சென்றிருந்தார். இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக காங்கிரஸ் குழு விமான நிலையத்திலேயே காத்திருந்தது. திமுக தரப்பில் ஒரு நம்பரை சொல்ல அதற்கு டெல்லி தலைமையிடம் ஒப்புதல் வேண்டி காங்கிரஸ் குழு காத்திருந்ததாக தகவல் வெளியானது. இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்களைச் சந்தித்தப்போது பேச்சுவார்த்தை தாமதம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், " கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் அகில இந்திய தலைமையின் அறிக்கைக்காக காத்திருக்கிறோம். டெல்லி தலைமை அறிக்கை தந்ததும் அண்ணா அறிவாலயம் சென்று ஒப்பந்தத்தை இறுதிசெய்வோம்.

திமுக - காங்கிரஸ் கூட்டணி சுமூகமாகத் தான் இருக்கிறது. பிரச்னை எதுவும் இல்லை" என்றிருக்கிறார். தொடர்ந்து ராஜ்ய சபா சீட் குறித்த கேள்விக்கு, "இன்னும் நிறைய டைம் இருக்கிறது" என்று கூறினார். திமுகவில் அனைத்து முடிவுகளையும் திமுக தலைமையை எடுத்து வருகிறது. அனைத்து கட்சிகளுக்கும் தொகுதி பங்கீடு கூட்டணி பேச்சுவார்த்தை என முழு ஆதிக்கத்தையும் கூட்டணி கட்சிகள் மீது திமுக செலுத்தி வருகிறது. கூடுதல் தொகுதி வேண்டும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோரிக்கையை முன்வைத்து பேசிய காங்கிரஸையும் விட்டுப் பிடிப்பது போல தற்போது திமுக காங்கிரசை கூட்டணிக்கு அழைத்து வந்துள்ளது. 2026 சட்டமன்ற தேர்தல் கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் ஓரிரு தொகுதிகளை மட்டுமே அதிகப்படுத்தி கொடுத்த திமுக காங்கிரசை கூட்டணிக்குள் தக்க வைக்க முயற்சித்தது. இதை ஏற்க மறுத்து காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறினால் கட்சி பிளவுபடும் அபாயமும் உள்ளது. காரணம் திமுகதான் வெற்றிக்கூட்டணி என்றும், மீண்டும் திமுகவே ஆட்சியை பிடிக்கும் என்றும் நம்பும் காங்கிரசில் ஒரு தரப்பினர், திமுக கூட்டணியை காங்கிரஸ் மேலிடம் முறித்தால் கட்சியை உடைக்கவும் தயாராகி வருகின்றனர். இது வரை பலம் என்னவென்றே தெரியாத தவெகவை நம்பி பயனில்லை என்றும் திமுகவுடன் கூட்டணி நீடிக்க வேண்டும் என்றும் 13 காங்கிரஸ் எம்எல்ஏக்கள் பகிரங்கமாக போர்க்கொடி தூக்கினர். இந்த சூழ்நிலையில் காங்கிரசுக்கு 28 எம்எல்ஏ சீட்டும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டு இருகட்சி தலைவர்களிடையே ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

## மதுரை கோ.புதூர் அல்-அமீன் மேல்நிலைப்பள்ளியில் புத்தக மதிப்புரை



மதுரை, மார்ச். 05-

மதுரை கோ.புதூர் அல்-அமீன் மேல்நிலைப்பள்ளியில் இலக்கியப் பூங்கா சார்பாக புத்தக வாசிப்புத் திறனை ஊக்கப்படுத்தும் நோக்கில் புத்தக மதிப்புரை நடைபெற்றது.

இதில் 6 ஆம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்பு வரை பயிலும் 24 மாணவர்கள் இலக்கியம், அறிவியல், வணிகம் மற்றும் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு போன்ற 24 புத்தகங்களை மதிப்புரை செய்தனர். புத்தக மதிப்புரை செய்த மாணவர்களை இப்பள்ளியின் தலைமையாசிரியர் ஷேக் நபி வெகுவாக பாராட்டினார். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் சார்பில் சிறப்பாக செய்தனர்.



## விளாத்திகுளம் அருகே ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் மீனவர்களுக்கான நலத்திட்ட பணிகளை முதல்வர் காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்

விளாத்திகுளம் மார்ச் 05-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேம்பார் மீனவகிராமத்தில் 32 விசைப்படகுகள் மற்றும் 100க்கணக்கான நாட்டுப் படகுகளை கொண்டு சுமார் 2000க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் அதிக கடல் சீற்றம் காரணமாக அடிக்கடி முகத்துவார பகுதி வழியாக மணல் திட்டுகளை தாண்டி கடல் நீர் கிராமத்திற்குள் கடல் நீர் கிராமத்திற்குள் புகுந்து விபத்துகள் ஏற்பட்டுள்ளது.

அதைப்போல் மீன்பிடி இறங்குதளம் பல ஆண்டுகளுக்கு முன்பு தூர்வாரப்பட்டதால், தற்போது கடற்கரையில் மண் அரிப்பு ஏற்பட்டு, அதிக அலையின் காரணமாக படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி மீனவர்களுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வந்தது, அணுகு சாலையும் பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டதால் மீன் இறங்கதளத்திலிருந்து டன் கணக்கில் மீன்களை ஏற்றி செல்லும் லாரிகள் அதிக எடைதாங்காமல் அடிக்கடி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி வந்தது.

இதனை அடுத்து வேம்பார் மீனவகிராம மக்கள் மாவட்ட நிர்வாக திட்டமும் மக்கள் பிரதிநிதியிடமும் பலமுறை புகார் அளித்து வந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் மீனவ கிராமத்தில் ரூபாய் 11 கோடியில் தற்காலிக முகத்துவாரம் மற்றும் மீன்பிடி இறங்குதளத்தில் தூர்வாருதல், பழுதடைந்த அணுகுசாலைகள் மற்றும் படகு அணையும் தளத்தினை சீரமைக்கும் பணியினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார், அதனைத் தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேன் பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் மீன் வளத்துறை துணை பொறியாளர் வள்ளி, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்ன மாரிமுத்து, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## ஈரோட்டில் போதிய போலீசாரை நியமனம் செய்து பொது மக்களுக்கு பாதுகாப்பு வழங்க விடுதலை வேங்கைகள் கட்சி வலியுறுத்தல்

ஈரோடு, மார்ச்.5-

விடுதலை வேங்கைகள் கட்சி யின் மாநில தலைவர் தமிழின்பன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமியிடம் ஒரு மனு கொடுத்து உள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது

சுமார் 8 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஈரோடு மாநகரத்தில் ஆறு காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன காவலர்கள் பற்றாக்குறையால் பல நேரங்களில் ஒரு நாளில் முடிய வேண்டிய பணிகள் பல நாட்கள் சென்றாலும் முடிவதில்லை என்ற குறை ஈரோடு மக்களிடையே உள்ளது .மேலும் காவல் ஆணையரை நியமித்து(கமிஷனர்) ஈரோடு மாநகராட்சி முழுவதும் போதிய அளவு பாதுகாப்பு வழங்கி சுமார் எட்டு லட்சம் மக்களை காத்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது .



ஈரோடு மாவட்டம் சிவகிரி பஸ் நிலையம் அருகே செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இதை பொது மக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்.

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp-ல் பின் தொடர



## தருமபுரி சட்டமன்ற தொகுதி ஊராட்சி வார்டு கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம்

தருமபுரி, மார்ச். 05-

தருமபுரி மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தருமபுரி சட்டமன்ற தொகுதி ஊராட்சி வார்டு கழக செயலாளர் ஆலோசனை கூட்டம் மாவட்டச் செயலாளர் டி. கே. ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கழக வளர்ச்சிப் பணிகள், 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் கழக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரிவு மாநில செயலாளர் பாலு, மாவட்ட கழக துணை செயலாளர் சங்கீதா, தருமபுரி நகர கழக செயலாளர் பார்த்திபன், ஒன்றிய கழக செயலாளர்கள் கணேசன், பெரியசாமி, பாஸ்கர், மகேந்திரவர்மன், சார்பு அமைப்பு மாவட்ட செயலாளர்கள் கிருஷ்ணன், கோகுல்ராஜ், ராமன், மாது, வேலாயுதம், மாரிமுத்து, கார்த்திகேயன், தருமபுரி சட்டமன்ற தொகுதி பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் குமார், தருமபுரி சட்டமன்ற தொகுதி உட்பட்ட ஊராட்சி செயலாளர்கள், வார்டு கழக செயலாளர் கலந்து கொண்டனர்.



திமுக கோவை தெற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர், முதலுதவி சமூக நல அறக்கட்டளையின் சட்ட ஆலோசனை குழு தலைவருமான வழக்கறிஞர் பொள்ளாச்சி பஞ்சலிங்கம் கோவை மாவட்டம் வால்பாறை (தனி) தொகுதிக்கு திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் தனது விருப்ப மனுவை வழங்கினார். இதனைத் தொடர்ந்து திமுக சார்பிலும் முதலுதவி சமூக நல அறக்கட்டளை சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்

## அதிமுக சார்பில் உதகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



ஊட்டி மார்ச் 05-

நீலகிரி மாவட்டம் உதகை நகரில் 27 வது வார்டு தீட்டுக்கல் பகுதிக்கு உட்பட்ட முள்ளிக்கொரை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட செயலாளர் கப்பச்சி.டி. வினோத் தலைமையில் நகரச் செயலாளர் கா.சண்முகம் முன்னிலையில் கிளைச் செயலாளர் மற்றும் மாணவர் அணி நகர் செயலாளர் தீட்டுக்கல் சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் அப்பகுதி மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் கப்பச்சி டி. வினோத் வழங்கினார். உடன் அம்மா பேரவை நகர செயலாளர் திவாகர் தாம்பட்டி சிவக்குமார் எம்ஜிஆர் மன்ற செயலாளர் ஜெயராமன் அவைத் தலைவர் எல்.ஐ.சி.சிவா வர்த்தக அணி செயலாளர் பூக்கடை ஸ்ரீதர் வைலட் லல்லி இம்தியாஸ் மற்றும் தீட்டுக்கல் பகுதி பொறுப்பாளர்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பல்லடத்தில் ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து பழக்கடையில் புகுந்த சொகுசு கார்



பல்லடம், மார்ச் 05-

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் திருச்சி கோவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அண்ணா நகரில் அதிகாலை கோவையை நோக்கிச் சென்ற சொகுசு கார் திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த கடைக்குள் புகுந்தது இதில் பயணம் செய்த இரண்டு பேர் கடைக்காரர் உள்பட மூன்று பேருக்கு காயம் ஏற்பட்டது உடனடியாக அருகில் உள்ளவர்கள் ஆம்புலன்ஸை வரவழைத்து பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் சிறிது நேரம் கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது இந்த விபத்து தொடர்பாக காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுரையில் மதுவிலக்கு குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பொது ஏலம்!

மதுரை, மார்ச். 05-

மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக செய்தி குறிப்பில் கூறியதாவது.

மதுரை மாவட்டம் காவல்துறை சார்பாக மதுவிலக்கு குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பொது ஏலம் வெளியீடு செய்வது சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வருகிற 10.03.2026- ஆம் தேதியன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு மதுரை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் மதுவிலக்கு குற்றங்களில் சம்மந்தப்பட்டு கைப்பற்றப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட 26 வாகனங்கள் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிகே.அர்விந், தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுரை மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமல் பிரிவு மதுரை மண்டல துணை இயக்குனர், தானியங்கி பணிமனை, மதுரை மாவட்டம். துணை ஆணையர், கலால், ஆகியோர் முன்னிலையில் பொது ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.மேலும் அரசுடமையாக்கப்பட்ட வாகனங்கள் ஏலத்திற்காக மதுரை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே வாகனங்களை ஏலம் எடுக்க விரும்பும் ஏலதாரர்கள் மேற்படி வாகனங்களை பார்வையிட்டு முன்பணமாக இருசக்கர வாகனத்திற்கு ரூ: 5000/-த்தை வரும் 06.03.2026 மற்றும் 07.03.2026 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலத்திலுள்ள மதுவிலக்கு அலுவலகத்தில் செலுத்தி ரசிது பெற்று ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்வோர் அரசு நிர்ணயித்த மதீப்பீட்டு தொகைக்கு அதிகமாக ஏலம் கேட்கவேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவில் நிலத்தை மனையிடங்களாக பிரிப்பதை தடுக்க கோரி, ஊர் பொதுமக்கள் சார்பில் வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் மனு




தாராபுரம், மார்ச். 05-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, குண்டடம் ஒன்றியம், நந்தவனம் பாளையம் கிராமத்தில், தூன்டி கருப்பராயன் கோயில், வெற்றி விநாயகர் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் பல ஆண்டுகளாக ஊர் பொதுமக்கள் சார்பில், தொடர்ந்து பூஜை, புனஸ்காரங்கள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அந்த இடத்தை வீட்டு மனை பிரிவுகளாக பிரித்து பட்டா வழங்க ஏற்பாடு நடைபெற்று வருவதாக அறிந்த ஊர் பொதுமக்கள் மேற்கண்ட நிலப்பகுதியை மனையிடங்களாக பிரிக்கும் நடவடிக்கையை கைவிட கோரி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில், மனு அளித்தனர். இது குறித்து, ஊர் பொதுமக்கள் கூறுகையில், இக்கோயிலில் பல ஆண்டுகளாக ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி, பூஜைகள் செய்து, திருவிழாக்கள் நடத்தி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். ஊர் பொதுமக்கள் சார்பில்,கோயிலுக்கு என்று ஒதுக்கிய இடத்தை வீட்டு மனை பிரிவுகளாக பிரிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க, எங்கள் ஊரில். வேறு அரசு புறம் போக்கு நிலங்கள் உள்ளன. அவற்றை பிரித்து வழங்கினால், எங்களுக்கு நல்லது. பல ஆண்டுகளாக கோயில் அமைத்து வழிபட்டு வரும் இந்த இடத்தை வீட்டு மகனைப் பிரிவுகளாக பிரிக்க நிணைப்பது எங்கள் மத நம்பிக்கையை புண்படுத்தும் விதமாக உள்ளது. எனவே, கோயில் இடத்தை வீட்டு மனை பிரிவுகளாக பிரிக்கும் முயற்சியை கைவிட வேண்டும் என, ஊர் பொதுமக்கள் சார்பில் தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளோம் என்று கூறினர்.




திருச்சி மாவட்டம் திராவிடர் கழகம் சார்பில் இந்திய ஆட்சிப் பணிகளின் பதவிகளில் உயர்ஜாதிகளின் ஆதிக்கத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மணப்பாறை ஒன்றிய தலைவர் பாலமுருகன் தலைமையில், திராவிடர் கழக தலைமை நிலைய சொற்பொழிவாளர் வழக்குரைஞர் பூவை. புலிகேசி சிறப்புரை ஆற்றினார் அதன் பின்னர் மக்கள் அதிகாரம் மாநிலச் செயலாளர் செழியன் கண்டன கோஷம் முழக்கமிட்டார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம், ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர் மாணவரணி, இளைஞர் அணி தோழர்கள் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கண்டரமாணிக்கம் ஊராட்சியில், ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் : அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!





சிவகங்கை, மார்ச்.05-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம் ஊராட்சி பகுதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் மற்றும் மேம்பாட்டு பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் திறந்து வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். அதில், நகரங்களுக்கு இணையாக கிராமங்கள் உருவெடுத்திடும் வகையில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தமிழகம் முழுவதும் அனைத்து கிராமப் பகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், கல்வி மற்றும் மருத்துவத்தினை தனது இரு கண்களாக கொண்டு, அதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்களின் உடல் நலத்தினை பேணிக்காக்கின்ற பொருட்டு, மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, நலம் காக்கும் ஸ்டாலின் ஆகிய திட்டங்கள் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் சிறந்து விளங்கி வருகிறது. தமிழகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவையானது பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகவும் திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, பிற நாடுகள்

மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் சிறந்த மருத்துவ சிகிச்சையை பெறுவதற்கு தமிழகத்தை நாடி வந்து, ஆரோக்கியமான சிகிச்சை பெற்று தங்களது பகுதிகளுக்கு

நலமுடன் செல்கின்றனர். மேலும், மருத்துவத்துறையில் திட்ட செயல்பாடுகள் மட்டுமன்றி அனைத்து மருத்துவ கட்டமைப்புக்கள் மற்றும் தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களும், அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதில், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தவிர, அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் மாவட்டத்தில் பல்வேறு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்கு முன்னுதாரணமாக, நமது சிவகங்கை மாவட்டம் சிறந்து விளங்கி வருகிறது. அதில், கண்டரமாணிக்கம் பகுதியில், தனியார் பங்களிப்புடன் தொடர்ந்து பல்வேறு பணிகள் நடைபெற்று வருவது சிறப்பிற்குரிய ஒன்றாகும். குறிப்பாக கடந்த ஐந்தாண்டுகளில் கண்டரமாணிக்கம் ஊராட்சி பகுதியில் மட்டும் சுமார் 10 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டிலான 166 வளர்ச்சி

திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், 136 திட்டப்பணிகள் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இவ்வாறாக பணிகள் மேற்கொள்வதற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து அளிக்கப்பட்ட தனியார் பங்களிப்பும் குறிப்பிடதக்கதாகும்.

அந்தவகையில், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம் ஊராட்சி பகுதியில், அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம், நமக்கு நாமே திட்டம் 2024-2025ன் கீழ் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுச்சுவர் மற்றும் நமக்கு நாமே திட்டம் 2025-2026ன் கீழ் ரூ.7.43 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் என மொத்தம் ரூபாய் 1.06 கோடி மதிப்பீட்டிலான பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மக்கள் சேவையை தொடர்ந்து மேற்கொண்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அரசுடன் இணைந்து பல்வேறு

பணிகளை மேற்கொள்ளவும் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று சிறப்பான மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி, மக்களின் நலன் காக்கின்ற அரசாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு திகழ்ந்து வருகிறது என கூட்டுறவுத்துறைஅமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் திருமதி இந்துமதி, ஏஎல். கேஆர். மணிகண்டன் (கண்டரமாணிக்கம் வளர்ச்சிக்குழு) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டை ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் 100 பயனாளிகளுக்கு ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவுகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்




விருதுநகர், மார்ச்.05-

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 100 பயனாளிகளுக்கு ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.

கலைஞர் கனவு இல்லம் திட்டம், 2030-க்குள் தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்ற கிராமப்புற ஏழைகளுக்கு இலவச கான்கிரீட் வீடுகளை வழங்கும் தமிழக அரசின் திட்டமாகும்.

பின்னர், அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழகமானது குடிசை இல்லாத தமிழகமாக மாற வேண்டும் என்று நம்முடைய முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டம் தான் இந்த கலைஞர் கனவு இல்லம் திட்டம். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.3.50 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் 100 பயனாளிகளுக்கு வேலை உத்தரவுகள் வழங்கப்படவுள்ளது. நம்முடைய மாவட்டத்தில் 4433 பயனாளிகளுக்கு இது போன்ற உத்தரவுகள் வழங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இவற்றையெல்லாம், பயன்படுத்தி அனைவரும் நலமுடன் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து, விருதுநகர் மாவட்டத்தில், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.35.38 கோடி மதிப்பில் 1011 வீடுகளும், 2025-2026 ஆம் ஆண்டிற்கு ரூ.76.37 கோடி மதிப்பில் 2182 வீடுகளும்

மேலும், கூடுதலாக 2025-2026 ஆம் ஆண்டில் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 வீடுகளும், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு 101 வீடுகளும், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 101 வீடுகளும், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 வீடுகளும், சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 101 வீடுகளும், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 வீடுகளும், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 56 வீடுகளும், திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 வீடுகளும், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 வீடுகளும், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 101 வீடுகளும், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்திற்கு 40 வீடுகளும் என மொத்தம் ரூ.35 கோடி மதிப்பில் 1000 வீடுகளும் என ஆக மொத்தம் 4193 வீடுகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.3.22 கோடி மதிப்பில் 92 வீடுகளும், 2025-2026 ஆம் ஆண்டிற்கு ரூ.11.58 கோடி மதிப்பில் 331 வீடுகளும், மேலும், கூடுதலாக 2025-2026 ஆம் ஆண்டிற்கு ரூ.3.50 கோடி மதிப்பில் 100 வீடுகளும் என மொத்தம் 523 வீடுகளுக்கு வீடு கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2025-2026 ஆம் ஆண்டில் கூடுதலாக வீடு கட்டுவதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 100 பயனாளிகளுக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர்(மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.வீ.கேசவதாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கீழ்குப்பம் கிராமத்தில் ஆர்.டி.அக்ரோ கல்வி மட்டும் சமூக நல அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

ஊத்தங்கரை, மார்ச். 05-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கீழ்குப்பம் கிராமத்தில், ஆர்.டி.அக்ரோ கல்வி மற்றும் சமூக நல அறக்கட்டளை சார்பில் கல்வி உதவித் தொகை, ஏழை எளிய மக்களுக்கு நல உதவி மற்றும் பலன் தரும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையின் தலைவர் நல்லாசிரியர் ஆர். தர்மலிங்கம் தலைமை வகித்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்கள் மற்றும் மரக்கன்றுகள் பெற்ற பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கீழ்குப்பம் பஞ்சாயத்திற்குட்பட்ட கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு நல உதவிகளை பெற்றுச் சென்றனர். நலத்திட்டங்களை வழங்கிய அறக்கட்டளை தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கு ஊர் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி சமூக நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஒருங்கிணைக்கும் முயற்சியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

தின தமிழ் நாளிதழில்
விளம்பரம் செய்து
பயன் பெறுங்கள்!

# திருப்புவனம் பேரூராட்சி அலுவலகம் திறப்பு விழா



திருப்புவனம், மார்ச். 05-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சிக்கு ஒரு கோடியே 18 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய அலுவலகத்தை கூட்டுறவு துறை அமைச்சர் பெரியகருப்பன் பங்கேற்று திறந்து வைத்தார்.

மேலும் 18 வார்டுகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசிக்கும் திருப்புவனம் நகருக்கான பேரூராட்சி அலுவலகம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது. கடந்த சில ஆண்களுக்கு முன் ஏற்பட்ட தீ விபத்தில் அலுவலகம் முற்றிலும் சேதமடைந்தது இதனால் மேல் தளத்தில் அலுவலகம் செயல்பட்டு வந்தது. இதனையடுத்து புதிய அலுவலகம் ஒரு கோடியே 18 லட்ச ரூபாய் செலவில் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டது.

கூட்ட அரங்கு, செயல் அலுவலர் அறை, தலைவர் அறை, வீட்டு வரி, குடிநீர் வரி செலுத்த தனித்தனி கவுண்டர் என அனைத்து அம்சங்களுடன் கூடிய புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா கண்டது இந்த விழாவில் எம்எல்ஏ தமிழரசி, ரவிக்குமார் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், செயல் அலுவலர் கவிதா, வட்டார வளர்ச்சி ராஜேஷ் குமார் மற்றும் கவுன்சிலர்கள் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.




# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு விளையாட்டு போட்டி

ஈரோடு மார்ச் 5-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் எதிர்ப்பு பிரிவு மற்றும் வணிக நிர்வாகவியல் மற்றும் கணினி பயன்பாட்டு துறை இணைந்து போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இலக்கை கண்டுபிடிக்கும் விளையாட்டு போட்டி நடை பெற்றது. இப்போட்டியில் பல்வேறு துறை சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரியின் முதல்வர் வாசுதேவன் மற்றும் துறைத்தலைவர் விஜயபிரியா பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

# மதுரை விரகனூர் ரிங்ரோடு அருகே வைகை ஆற்றின் வடகரை முதல் பழைய தொண்டி சாலை சக்குடி வரை சிவகங்கை செல்ல புதிய சாலை அமைத்தல் பணி துவக்கம்!



மதுரை மார்ச். 05-

மதுரை மாநகர் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைக்க பல்வேறு புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் மதுரையிலிருந்து கருப்பாயூரணி, வரிச்சியூர் வழியாக சிவகங்கை செல்லும் சாலையானது நெருக்கமான குடியிருப்பு, பள்ளி, கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலைகளால் மிகுந்த போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவிக்கின்றது.

எனவே இச்சாலையை சுற்றியுள்ள ஆண்டார்கொட்டாரம், கல்மேடு, கருப்பப்பிள்ளையேந்தல், சக்கிமங்கலம், கார்சேரி, சக்குடி ஆகிய கிராமங்களிருந்து வரும் போக்குவரத்தானது கருப்பாயூரணி வழியாக சுற்றி மதுரைக்கு சென்று வருவதால் மதுரை சிவகங்கை சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

எனவே சிவகங்கை சாலையில் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும் மேற்கூரிய கிராம மக்கள் மதுரைக்கு நேரிடையாக வந்தடையும் வகையிலும் விரகனூர் சுற்றுச்சாலை முதல் சக்குடி வரை 8 கிமீ நீளத்திற்கு புதிய சாலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 07.12.2025 ஆண்டு தேதியன்று மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவிப்பு வெளியிட்டார்.

அதன்படி விரகனூர் சுற்றுச்சாலை முதல் சக்குடி வரை புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ119 கோடிக்கு டெண்டர் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் தி/வா. நாட்ச் இந்தியா ப்ராஜக்ட்ஸ் (பி) லிட் நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்டது . இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் சாலை அமைக்கும் பணியை துவக்கிவைத்தார்.

இச்சாலை அமைக்க 3.5 கிமீ நீளத்திற்கு 10 ஹெக்டேர் பரப்பளவிற்கு தனியார் நிலத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நில எடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சாலை 7.06 அகலம் கொண்ட இருவழிச்சாலையாக அமைக்கப்படுகிறது. இச்சாலையில் 4 சிறுபாலங்களும், 20 பெட்டி பாலங்களும் கட்டப்படவுள்ளது. 18 மாதங்களுக்குள் சாலைப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இச்சாலைப்பணியினால் மதுரை மாநகரை சுற்றியுள்ள ஆண்டார்கொட்டாரம், கருப்பப்பிள்ளையேந்தல், கல்மேடு, இளமானூர், சக்கிமங்கலம், கார்சேரி, சக்குடி ஆகிய கிராம மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். மேலும் சிவகங்கை செல்ல புதிய சாலை வசதி உண்டாகும். கருப்பாயூரணி மற்றும் வரிச்சியூர் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது மதுரை நெடுஞ்சாலைத்துறை தரக்கட்டுப்பாடு கோட்டப் பொறியாளர். கே.பிரசன்ன வெங்கடேசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை உதவிக் கோட்டப் பொறியாளர் எஸ்.ஜி.ஆனந்த் ஆகியோர் உட்பட துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.


## அறிவிப்பு

வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை
ந.க.4457/2025/அ 5 நாள் : 27.02.2026
நாடிமுத்து த/பெ.ராசு கீழப்பாளையம் பட்டுக்கோட்டை , தஞ்சாவூர் மாவட்டம்.

–மனுதாரர்

–எதிர்–

இல்லை

–எதிர் மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, கீழப்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் நாடிமுத்து ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்ன வென்றால், எனது பெரிய தாயார் பெத்தாயி க/பெ. ராசு என்பவர் கடந்த 02.10–2009 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை எனது அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் அந்நேரத்தில் பதிவு செய்யத் தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் R. நாடிமுத்து



## அறிவிப்பு

வருவாய் கோட்ட அலுவலகம் பட்டுக்கோட்டை
ந.க.716/2026/அ 5 நாள் :27.02.2026
கோடீஸ்வரன் த/பெ. மகாலிங்கம் மழவேனிற்காடு, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

மனுதாரர்

எதிர்

இல்லை

எதிர்மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினம், மழவேனிற்காடு என்ற முகவரியில் வசிக்கும் கோடீஸ்வரன் ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால். எனது தந்தை மகாலிங்கம் த/பெ.செல்லையன் என்பவர் கடந்த 22.02. .2017 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை எனது அறியாமையினாலும் கவனக் குறைவினாலும் அந்நேரத்தில் பதிவு செய்யத் தவறிவிட்டேன். எனவே தற்போது காலதாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய். பட்டுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின். இவ்வறிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதார் கோடீஸ்வரன்.


# காவேரி மருத்துவமனை தமிழகமெங்கும் குடல் ரத்தக்கசிவுக்கான சிறப்பு சிகிச்சை மையங்கள் துவக்கம்




சென்னை, மார்ச்.05-

செரிமான மண்டலத்தின் உட்புறத்தில் ஏற்படும் ரத்தக்கசிவானது, ஒரு பொதுவான அவசர மருத்துவ பாதிப்பு நிலையாகும். இதற்கு சரியான நேரத்திற்குள் பரிசோதனை, ஒருங்கிணைந்த பராமரிப்பு மற்றும் இரத்தக்கசிவை சரிசெய்வதற்கு விரிவான சிகிச்சை அளிப்பதற்காக, காவேரி மருத்துவமனை குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் பிரத்யேக 'ஜிஐ ப்ளீடு' சிகிச்சை மையங்களை தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இரு மாநிலங்களிலும் உள்ள 12 மருத்துவமனைகள் மூலம், குடல் இரத்தக்கசிவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தங்கள் வாழ்விடங்களுக்கு அருகிலேயே தனிச்சிறப்பான, பல்துறைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்பை பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

இந்த சிறப்பு சிகிச்சை மையங்கள், அவசர சிகிச்சை மருத்துவர்கள், இரைப்பை-குடல் நிபுணர்கள், தீவிர சிகிச்சை நிபுணர்கள், கதிரியக்க நிபுணர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் சிகிச்சை அளிக்கின்றன. அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நோயாளி வந்து சேர்வது முதல், ஆபத்தை மதிப்பீடு செய்தல், தீவிர சிகிச்சை பிரிவு அல்லது வார்டில் அனுமதித்தல், எண்டோஸ்கோபி அல்லது கதிரியக்க சிகிச்சைகள் அளித்தல் மற்றும் குணமடைந்து மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்படுவது வரை, நோயாளிகள், தெளிவாக வரையறை செய்யப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி மிக சரியான முறையில் பராமரிப்பை பெறுகின்றனர்.



ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோவிலில் மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் அர்ஜீன் ராம் மேக்வால் வருகை புரிந்து மூலவர் பெருமாள், ரங்கநாயகி தாயார், ராமானுஜர் சன்னதிகளுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் உள்துறை கண்காணிப்பாளர் வெங்கடேசன் மற்றும் தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டர் ஆகியோர் சிறப்பு வரவேற்பு அளித்தனர்.

# தாராபுரத்தில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடங்களை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தார்!



தாராபுரம், மார்ச். 05-

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் சுமார் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்தில் இருந்து தமிழ் நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் இன்று திறந்து வைத்தார். இதையடுத்து, திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில்,

மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் குத்து விளக்கு ஏற்றி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தார். மேலும் அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடங்களை திறந்து வைத்த தமிழ் நாடு முதலமைச்சர் முக ஸ்டாலினுக்கு, மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தாராபுரம் பகுதி பொதுமக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், தாராபுரம் நகர் மன்ற தலைவர் பாப்பு கண்ணன், திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மனோன் மணி, துணை இயக்குநர்( நல பணிகள்) மீரா, கோவை பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், நகர செயலாளர் முருகானந்தம், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், துறை சார்ந்த அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயருக்கு ஹோலிகிராஸ் கல்லூரி பெண்கள் விருது

நாகர்கோவில், மார்ச். 5-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் குருசடி ஹோலிகிறாஸ் கல்லூரியில் 2026 மகளிர் தினத்தை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்காக சிறப்பாக செயல்பட்ட சிறந்த பெண்மணிக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விருதானது சமுதாயத்தில் கொடுக்கப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்ந்து தமது சமூகப் பணிகளை ஏழை, எளிய மக்களுக்காக செய்து வரும் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா அவர்களுக்கு "ஹோலிகிராஸ் கல்லூரி




பெண்கள்" விருதினை மதுரை மாகாண தலைமை அருட் சகோதரி. ஜாக்குலின் பிரகாசம் வழங்கினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் அருட் சகோதரி. சகாய செல்வி, கல்லூரி செயலர் அருட்சகோதரி. கில்டா உடனிருந்து கௌரவித்தார்கள்.



# தூத்துக்குடியில் 10 மாடி காவலர் குடியிருப்பு திறப்பு விழா எஸ்பி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்!

தூத்துக்குடி, மார்ச்.05-

தூத்துக்குடி பிரையன்ட் நகர் பகுதியில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் (திருநெல்வேலி கோட்டம்) மூலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 10 மாடி அடுக்குமாடி காவலர் குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மொத்தம் 100 வீடுகளைக் கொண்ட இந்த நவீன குடியிருப்புகள், காவலர்களின் நலன் கருதி அரசு உத்தரவின் பேரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் தொடக்க விழாவைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன், புதிய குடியிருப்பில் குத்துவிளக்கேற்றி முறைப்படி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் செயற்பொறியாளர் குமரேசன், தூத்துக்குடி காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆறுமுகம், பயிற்சி காவல் உதவி கண்காணிப்பாளர் ராகுல் வி.கோபால், நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சுனில் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உட்பட முக்கியப் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் வருஷாபிஷேக விழா!

கன்னியாகுமரி, மார்ச்.5-



கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் கடந்த 2013-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந்தேதி கும்பாபிஷேகம் நடந்தது. இந்த கும்பாபிஷேகம் நடந்து 12 ஆண்டுகள் நிறைவுபெற்றதையொட்டி இந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கான கும்பாபிஷேக திருப்பணிகள் தொடங்கப்படாததால் வருஷாபிஷேக விழா நேற்று நடைபெற்றது.

அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு நிர்மால்ய பூஜையும், விஸ்விஸ்வரூப தரிசனமும் நடந்தது. பின்னர் கணபதி ஹோமமும், நவகலச பூஜையும், அதைத்தொடர்ந்து காலை 10 மணிக்கு அம்மனுக்கு எண்ணெய், பால், பன்னீர், தயிர், இளநீர், பன்னீர், களபம், சந்தனம், குங்குமம், மஞ்சள்பொடி, மாப்பொடி, பஞ்சாமிர்தம், தேன் உள்பட 16 வகையான ஷோடசா அபிஷேகம் நடந்தது. தொடர்ந்து கலசாபிஷேகமும் நடைபெற்றது.

இந்த கலசாபிஷேகத்தை மணலிக்கரை மாத்தூர் மடம் தந்திரி சஜித் சங்கரநாராயணரு நடத்தினார். வருஷாபிஷேகத்தை ஒட்டி வைரக்கல் மூக்குத்தி வைரக் கிரீடம் அணிவிக்கப்பட்டு சந்தனகாப்பு அலங்காரத்துடன் அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு அம்மனை வெள்ளி பல்லக்கில் எழுந்தருள செய்து கோவிலின் உள் பிரகாரத்தை சுற்றி மேள தாளம் முழங்க 3 முறை வலம் வரச் செய்யும் நிகழ்ச்சியும், அதைத்தொடர்ந்து வெள்ளி சிம்மாசனத்தில் அம்மனுக்கு தாலாட்டு நிகழ்ச்சியும்,அத்தாழ பூஜையும்,ஏகாந்த தீபாராதனையும் நடந்தது.



# சங்கரன்கோவிலில் உழைப்பாளர் நலக்கூடம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் துவக்கி வைத்தார்

## தென்காசி மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், எம்பி ராணி ஸ்ரீகுமார், ராஜா எம்எல்ஏ பங்கேற்பு

சங்கரன்கோவில். மார்ச்.5-

தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அம்பேத்கர் நகரில் புதியதாக ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தினை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட கலெக்டர் கமல்கிஷோர், எம்பி ராணி ஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 10 கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1,63,600 மதிப்பிலான கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஓய்வூதியத்திற்கான உதவித்தொகை மற்றும் தொழிலாளர் நல அட்டைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், தொழிலாளர் நல வாரிய உதவி ஆணையர் ஜெனிபர், நகர திமுக செயலாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர் பெரியதுரை, கவுன்சிலர்கள் செல்வராஜ், ராமுராமர், மாணவரணி வெங்கடேஷ், ஐ டி விங்க் சிவசங்கரநாராயணன், இளைஞரணி ஜான்சன், முன்னாள் வர்த்தக அணி பத்மநாபன் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி சுற்றுலா மேம்பாட்டு குழு கூட்டம்

**நாகர்கோவில், மார்ச் .5 –**

**கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் நடைபெற்றது.**

**கூட்டத்தில் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டத்தின் சுற்றுலா தலங்கள் தமிழகத்திற்கு மட்டுமின்றி நாட்டிற்கே பெருமை சேர்ப்பதாக தெரிவித்தார்.**

**கன்னியாகுமரி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக உள்ளது. கடலின் நடுவே பாறையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், மற்றொரு பாறையில் அமைந்துள்ள திருவள்ளுவர் 133 அடி உயர சிலை, இவற்றை இணைக்கும் கண்ணாடி பாலம், மேலும் திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டிப்பாலம், பத்மநாபபுரம் அரண்மனை உள்ளிட்ட பல முக்கிய சுற்றுலா தலங்கள் மாவட்டத்தின் சிறப்பாக உள்ளன என்று அவர் கூறினார்.**

**சுற்றுலா பயணிகளுக்கான குடிநீர், கழிப்பறை, பேருந்து வசதி, குப்பை அகற்றுதல் போன்ற அடிப்படை வசதிகளை முழுமையாக ஏற்படுத்தவும், "குப்பையில்லா கன்னியாகுமரி" உருவாக்க அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.**

**வளர்ச்சி பணிகள் விரைவில் முடிக்க வேண்டும்**

**மாத்தூர், திற்பரப்பு, சிற்றாறு உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை மார்ச் மாதத்திற்குள் முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.**

**கண்ணாடி பாலம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், நுழைவுச்சீட்டு பெற நீண்ட வரிசை நிலவி வந்தது. இதனை கருத்தில் கொண்டு, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஆன்லைன் மூலம் நுழைவுச்சீட்டு வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

**மேலும், சுற்றுலா பயணிகள் ரத்து செய்யும் டிக்கெட்டுகளுக்கான பணத்தை உடனடியாக அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்க பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.**

**இந்த கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) ராகுல்குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் பூபதி, கன்னியாகுமரி நகராட்சி ஆணையாளர் கண்மணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.**



**கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் நடைபெற்றது.**




# கோவையில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டு விழா!

கோவை, மார்ச்.05-

கோவை காந்திபுரம் பகுதியில் வனத்துறையின் சார்பில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த அக்டோபர் மாதம் நீலகிரி வரையாடு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே மாநில விலங்கினை பாதுகாக்க முதல் முதலாக தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட தனித்துவமான திட்டமாகும்.நீலகிரி வரையாடு திட்ட அலுவலகம் கோவையில் செயல்பட்டு வருகிறது இதில் திட்ட இயக்குனர் செண்பகப்பிரியா, உதவி இயக்குனர் திட்ட விஞ்ஞானி கணேஷ் ராம் , மற்றும் நான்கு மூத்த ஆராய்ச்சி உறுப்பினர்கள் ஆகிய தலைமையிலான குழு உள்ளது.

இக்குழு திட்டங்களின் அனைத்து நடவடிக்கைகளையும் நீலகிரி வரையாடுகளை தன்னகத்தை கொண்டுள்ள 14 வனக்கோட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் கட்டுவதற்காக கோவையில் உள்ள காந்திபுரத்தில் நீலகிரி வரையாடு திட்டத்திற்கு 50 சென்ட் பரப்பளவு உள்ள நிலம் ஒதுக்கப்பட்டு தற்போது இம்மையும் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது தமிழ்நாடு அரசு இந்த நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் அமைப்பதற்கு முக்கிய காரணம்.அதன்படி இம்மையத்தில் நீலகிரி வரையாடுகள் தொடர்பான ஆராய்ச்சி கண்காணிப்பு மற்றும் ஆவணபடுத்தலுக்கான ஒருங்கிணைந்த பாதுகாப்பு மையமாக செயல்படும் நவீன தொழில்நுட்பங்கள் காட்சிகள் மற்றும் அறிவியல் தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பு செயல்பாடுகளை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இம்மையம் அமைக்கப்பட உள்ளது என்று தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க.கிரியப்பனவர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப. ராஜ்குமார் மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் துணை மேயர் ரா.வெற்றி செல்வன்,67 வது மாமன்ற உறுப்பினர் வித்யா ரங்கநாதன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாளை குளச்சல் வரும் துணை முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பு



நாகர்கோவில், மார்ச்.5-

கலைஞர் நூலகத்தை திறந்து வைக்க குளச்சல் வருகை தரும் துணை முதல்வருக்கு அயலக அணி துணைச் செயலாளர் பாபு வினிட்பிரட் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நாளை 6-ந்தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தருகிறார். அதன் தொடர்ச்சியாக குமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் அயலக அணி துணைச் செயலாளர் பாபு வினிட்பிரட் தலைமையில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை திறந்து வைக்க நாளை மாலை 6-மணிக்கு வருகை வருவதையொட்டி தமிழக துணை முதல்வர் உதயநிதிக்கு அயலக அணி சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க அழைப்பு விடுத்தார்.



# குளச்சல் துறைமுக விரிவாக்க பணிக்கு தமிழக முதல்வர் அடிக்கல்

## அமைச்சர் மனோதங்கராஜ் குத்துவிளக்கேற்றினார்

நாகர்கோவில், மார்ச்.5-

தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று சென்னையிலிருந்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் வாணியக்குடியில் புதிய மீன் இறங்குதளம் மற்றும் குளச்சல் துறைமுக விரிவாக்க பணி அமைக்க காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் வாணியக்குடி மற்றும் குளச்சல் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குத்துவிளக்கேற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து பேசுகையில்-

வாணியக்குடியில் மீன்பிடி தொழில் செய்வதற்கு எவ்வித உட்கட்டமைப்பு வசதிகளும் இல்லாத காரணத்தினால், புதிய மீன்பிடி துறைமுகம் அமைப்பது என்பது நம்முடைய தேர்தல் அறிக்கையில் உள்ள ஒரு அறிக்கையாகும். அதனை நிறைவேற்றுகின்ற விதமாக தற்போது ரூ.150 கோடி மதிப்பில் வாணியக்குடி மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு காணொலி காட்சி வாயிலாக முதல்வர் அடிக்கல் நாட்டி உள்ளார்.

தொடர்ந்து குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் விரிவாக்க பணிக்காக ரூ.150.00 கோடி ஒதுக்கப்பட்டு, இன்று பணிகள் துவக்கப்பட்டுள்ளது. என கூறினார்.

நிகழ்ச்சியில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜி.பிரின்ஸ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், மீன்பிடித் துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளர் பிரேமலதா, துறை அலுவலர்கள், பணியாளர்கள், மீனவ பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்கொண்டார்கள்.

# மார்ச் 18 -ல் நாகர்கோவில் தலைமை தபால் நிலையத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

நாகர்கோவில், மார்ச். 5-

கன்னியாகுமரி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் செந்தில்குமார் மார்ச் 18- ல் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் என தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

இந்திய அஞ்சல் துறை சார்பாக கன்னியாகுமரி மாவட்ட அளவிலான மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் 18.03.2026 அன்று 10.30 மணியளவில் நாகர்கோவில் தலைமை அஞ்சலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. அஞ்சல்துறை சேவையில் ஏதேனும் குறைகள் இருப்பின் பொதுமக்கள் அதனை இக்கூட்டத்தில் நேரில் வந்து தெரிவிக்கலாம் (அல்லது) தங்கள் குறைகளை தபால் மூலமாக அனைத்து விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

தபால் உறையின் மீது முன்பக்க மேல்பகுதியில் 'தபால் சேவை குறை தீர்க்கும் முகாம் ஸ்ரீ மார்ச் 2026' என்று தெளிவாக குறிப்பிட்டிருக்க வேண்டும். புகார் மனுக்கள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் 11.03.2026 இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கன்னியாகுமரியில் பாதுகாப்புகளை அதிகரிக்க சிசிடிவி கட்டுப்பாட்டு அறை

## எஸ்.பி. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!!



கன்னியாகுமரி, மார்ச். 5-

சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இந்த நிலையில் கன்னியாகுமரியில் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக கன்னியாகுமரியில் நவீனப்படுத்தப்பட்ட வகையில் 150 கண்காணிப்பு கேமராக்கள் புதிதாக அமைக்கப்பட உள்ளன. உயர் ரக தொழில்நுட்பத்துடன் கூடிய வடிவமைப்புடன் இந்த கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இந்த கேமராக்களை ஒருங்கிணைத்து புதிய கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்படுகிறது.

இதற்கான பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் நேற்று தொடக்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்:- இந்த கேமராக்கள் அனைத்தும் நவீன தொழில்நுட்ப வசதி கொண்டவையாகும். 120 கிலோமீட்டர் வேகத்தில் வாகனங்கள் சென்றால் கூட அதன் நம்பர் பிளேட் துல்லியமாக கண்டறிய முடியும். கன்னியாகுமரியின் நுழைவு பகுதியை சுற்றி இந்த கேமராக்கள் அமைக்கப்படுகின்றன. சீரோ பாயின்ட், விவேகானந்தபுரம் நுழைவுவாயில், அகஸ்தீஸ்வரம் நான்கு வழி சாலை தொடக்கம், ரவுண்டான பகுதிகளில் இந்த கேமராக்கள் இருக்கும். மேலும் முக்கிய அனைத்து பகுதிகளிலும் கேமராக்கள் வைக்கப்பட்டுள்ளன.

24 மணி நேரமும் மழை புயல் போன்ற இயற்கை சூழ்நிலையிலும் கேமராக்கள் இயங்கும் என கூறினார். இந்த நிகழ்ச்சியில் டிஎஸ்பி ஜெயச்சந்திரன், இன்ஸ்பெக்டர் வீர வரதராஜ பெருமாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.